November 1, 2021:

# மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் சென்னை கிளை:

*தமிழக அரசின் வெளிநாட்டு உறவுகளுக்கான ஒருங்கிணைப்பு பணியில் மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் கிளை செயலகம் 2007 முதல் சென்னையில் செயல்படுகிறது.இக்கிளை வெளிநாடுவாழ் இந்தியர்களின் பொதுநலம்,வர்த்தக மேம்பாடு ,சுற்றுலா ,தொழில் வளர்ச்சி ஆகிய 4 பணிகளை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.




*வெளிநாடுவாழ் இந்தியர்கள் தங்களுக்கான சேவையை madad.gov.in என்கிற 2 முக்கிய இணையதளங்கள் மூலம் பெறலாம்.தவிர பொதுமக்களுடன் இந்தக் கிளைக்கு நேரடி தொடர்பு இல்லை.

*"கான்சுலர் சர்வீஸ்' எனப்படும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான சேவை டெல்லியில் மட்டுமே கிடைத்து வந்தது.தற்போது இந்த சேவை இக்கிளையின் மூலம் சென்னையிலேயே கிடைக்கிறது.குறிப்பாக,வெளிநாடுவாழ் மக்களின் பிறப்பு,இறப்பு சான்றிதழை சரிபார்த்து உறுதி

செய்யும் சேவை தமிழர்களுக்கு பெரும் உதவியாக உள்ளது.இத்தகவலை இதன் இயக்குனர் எம்.வெங்கடாசலம் IFS தெரிவித்தார்.

## ஜி-20 மாநாட்டின் இலக்கு::

*கார்பன் சமநிலை அல்லது நிகர பூஜ்ஜிய பசுமைஇல்ல வாயு உமிழ்வு என்பது வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றம் மற்றும் அகற்றத்துக்கு இடையிலான சமநிலை ஆகும்.




*ஜி-20 அமைப்பின் 16வது உச்சி மாநாடு இத்தாலி தலைநகர் ரோமில் நேற்று தொடங்கியது.இதில் கார்பன் சமநிலையை 2050ம் ஆண்டுக்குள் அடைவது என ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

## ஸ்காட்லாந்தில் பருவநிலை மாநாடு:




*ஐ.நா பருவநிலை மாநாடு ,ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் நேற்று தொடங்கியது.நவம்பர் 12ம் தேதி வரை நடைபெறும் இந்த மாநாட்டில் ,புவி வெப்பமாதல் போன்ற அனைவருக்கும் பொதுவான சவால்களை எதிர்கொள்வது குறித்து உலக நாடுகளின் தலைவர்கள் விவாதிக்கவுள்ளனர்.

## தமிழக கோவில்கள்;

*திருக்கோயில்களில் 5 ஆண்டுகள் தற்காலிகமாக பணிபுரியும் 1,221 தினக்கூலி பணியாளர்களின் பணியை வரன்முறை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## மத்திய அரசு அறிக்கை சார்ந்த தகவல்கள்:

*சீன ராணுவத்துடன் கிழக்கு லடாக் பகுதியில் ஏற்பட்ட மோதலின்போது சிறப்பாக கடமையாற்றியதற்காக இந்தோ-திபெத் எல்லைக் காவல் படையை சேர்ந்த 260 வீரர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சரின் சிறப்பு நடவடிக்கைப் பதக்கம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

*பெட்ரோலியம் பொருள்கள் மீதான கலால் வரி வசூல் கரோனா பரவலுக்கு முந்தைய காலத்தைவிட 79 சதவீதம் அதிகரித்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*பிரதமரின் பசல் யோஜனா பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 2020-21ம் ஆண்டில் விவசாயிகள் ரூ.9,570 கோடி மட்டுமே இழப்பீடு பெற்றிருப்பது மத்திய அரசின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.




## சர்வதேச செஸ் போட்டி:

*ஐரோப்பிய நாடான செர்பியாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் ஈரோட்டை சேர்ந்த இந்திய கிராண்ட் மாஸ்டர் இனியன் பட்டம் வென்றார்.

